BETHSHAN
SPECIAL SCHOOL

# 2023
## ஆண்டு அறிக்கை

# நிகழ்வுகள்



2023 - ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில்
வாலிபால் மற்றும் புட்சல் விளையாட்டில் கலந்துகொண்டு வெண்கலப் பதக்கம் வென்ற
எமது பள்ளி வீரர்களை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
திருமதி. ஸ்ரீமதி, அவர்கள் பதக்கங்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

## சிறகுகளின் சங்கமம் கலைத் திருவிழா









முதல் முறையாக மதுரை மாநகரில் உள்ள அனைத்து சிறப்பு பள்ளிகளில் உள்ள அனைத்து அறிவுசார் குறையுடைய மாற்றுத்திறனாளிகளும் ஒன்றுகூடி மகிழ்ந்திருக்கும் வகையில் **சிறகுகளின் சங்கமம்** என்கிற பெயரில் மாபெரும் கலைத் திருவிழாவினை பெத்சான் சிறப்பு பள்ளி மற்றும் வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியும் இணைந்து 2023 மார்ச் 8 ஆம் தேதி அன்று மதுரை, நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி வளாகத்தில் நடத்தினோம். இதில் சிறப்பு குழந்தைகள் சுமார் 750 பேர்களும், சிறப்பாசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் 225 பேர்களும், தன்னார்வலர்கள், பெற்றோர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் என சுமார் 1,500 பேருக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வின்போது கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் டி.சர்ட் மற்றும் அழகிய பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் மாணவர்களை மகிழ்விக்கும் வகையில் பொம்மலாட்டம் மற்றும் மேஜிக் ஷோ நடத்தப்பட்டது. அன்றைய நாள் முழுவதும் சிறப்பு குழந்தைகள் தங்களுடைய தனித் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் அவர்களது கலலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக மேடையில் அரங்கேறியது.

அன்றைய தினம் சிறப்பு குழந்தைகளின் உணர்வையும், தேவையையும், தன்மையையும், சமூகத்தின் பார்வையையும் ஒருங்கே வெளிப்படுத்தும் வகையில் சிறப்பு பாடல் ஒன்றும் வெளியிடப்பட்டது. மேலும், பொது மக்களுக்கு சிறப்பு குழந்தைகள் பற்றிய சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கலை நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்வாக விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இப்பேரணியை மதுரை மாநகர மேயர் திருமதி. **V. இந்திராணி பொன்வசந்த்** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். கலை நிகழ்ச்சிகளை நாடார் மஹாஜன சங்கப் பொதுச் செயலாளர் திரு. **G. கரிக்கோல்ராஜ்** அவர்கள் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு பாடலை ரோட்டரி சங்கத்தின் ஆளுநர் Rtn. **R. ஆனந்தஜோதி** அவர்கள் வெளியிட்டார்கள். மேலும், இக்கலைத்திருவிழாவில் திரு.**R. சுந்தர்** அவர்கள், செயலாளர், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, திரு. **A. ஆனந்தகுமார்** அவர்கள் இணைச்செயலாளர் வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, Rtn. **R. ராஜா கோவிந்தசாமி** அவர்கள், ரோட்டரி சங்க ஆளுநர் ( 2024 - 2025 ), திருமதி. **அமலா பாக்யராஜ்** அவர்கள், நிர்வாக இயக்குநர் & Er. **S.S. ராமகிருஷ்ணன்** அவர்கள், இயக்குநர், மேக்ஸ் ப்ராப்பர்ட்டீஸ் ( பி ) லிட்., திரு. **J. ரிஷ்வந்த்** அவர்கள், செயல் இயக்குநர், ஜே.ஸி. ரெஸிடென்சி மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## உலக சிறுதானிய தினவிழா



பள்ளியில் நடைபெற்ற உலக சிறுதானியத் தினவிழாவில் சிறுதானியங்களிலிருந்து நமக்கு கிடைக்கப்பெறும் ஊட்டச்சத்துக்கள், பயன்கள் மற்றும் அவசியம் பற்றி மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் சிறுதானியங்களைக் கொண்டு சுவையாக செய்யப்பட்ட லட்டு, கம்மங்கூழ், புட்டு மற்றும் தட்டை போன்ற பலகாரங்களை மாணவர்கள் ரசித்து சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்.

## கிறிஸ்துமஸ்விழா




இவ்வருட கிறிஸ்துமஸ் விழாவின்போது பள்ளி மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். நிகழ்ச்சியில் இறைசெய்தியை மதுரை இவாஞ்செலிக்கல் பாப்திஸ்து திருச்சபையின் போதகர் **D. ஸ்டீபன்சன்** அவர்கள் வழங்கினார்கள். பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## உலக தந்தையர் தினவிழா



உலக தந்தையர் தினத்தன்று நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட 6 - வது பட்டாலியன் காவல் கண்காணிப்பாளர் **திரு. M. பாஸ்கரன்** அவர்கள் கலந்து கொண்டு பேசியபோது ஒவ்வொரு குழந்தையின் பெற்றோர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள். அதே நேரத்தில் குடும்பத்தில் அப்பாக்களின் கடின உழைப்பும், தியாகமும் குடும்ப பாதுகாப்பிற்கும்,முன்னேற்றத்திற்கும் அடித்தளமானது என்றார்கள்.

## உலக மனநல நாள்









*20 ஆம் ஆண்டு உலக மனநல நாள் நிகழ்ச்சியை எமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டல், மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்கம் மற்றும் மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கமும் இணைந்து மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தியது. இப்போட்டிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள 18 சிறப்பு பள்ளிகளை சார்ந்த 108 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வருட கருப்பொருளை ரோட்டரி மாவட்டம் - 3000 ன் ஆளுநர்( 2024-2025 )*Rtn.R **ராஜா கோவிந்தசாமி** *அவர்கள், வெளியிட அதன் முதல் பிரதியை சூரியசக்தி ஆய்வகத்தின் முதன்மை விஞ்ஞானி திரு.* **E. எபினேசர் செல்லச்சாமி** *அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். போட்டிகளை மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்கத்தின் சேர்மன் திரு.* **J. ரிஷ்வந்த்** *அவர்களும் மதுரை மீனாட்சி ரோட்டரி சங்க தலைவர் திரு.* **ஜெயசீலன்** *அவர்களும் துவக்கி வைத்தார்கள். போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் மதுரை மண்டல இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் மூத்த இயக்குனர்* Dr. M. **சண்முகம்** *அவர்களும், ஸ்ரீவிநாயாக ஸ்கிரீன்ஸ், நிர்வாக இயக்குநர்* Rtn.L. **ராமநாதன்** *மற்றும்* Rtn. **கல்யாணி ராமநாதன்** *ஆகியோரும் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கி கௌரவித்தார்கள். இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு மதுரை ஜே.ஸி.ரெஸிடென்சி, மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்கம், மதுரை லேடிஸ் சர்க்கிள் - 8 சங்கம் மற்றும் மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கம் ஆகியவை உறுதுணையாக இருந்தது.*

*மேலும், அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகள் பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெத்சான் சிறப்பு பள்ளி மற்றும் மதுரை ஆதி அரிமா சங்கமும் இணைந்து விழிப்புணர்வு வாகனத்தின் மூலம் மதுரை மாநகர் முழுவதும் மூன்று நாட்கள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு கைப்பிரதிகள் வழங்கியும், ஒலி பெருக்கியின் மூலம் ஒலிபரப்பும் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை அரிமா சங்கத்தின் மாவட்ட ஆளுநர்* MJF Lion Er. **ராதாகிருஷ்ணன்** *அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். முன்னதாக மதுரை காந்தி அருங்காட்சியத்தின் செயலாளர் திரு.* **K.R.. நந்தாராவ்** *அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஆதி அரிமா சங்க உறுப்பினர்கள்,* CSI *ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி மாணவிகள் மற்றும் பெத்சான் சிறப்பு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.*

## சிறப்பு பயிலரங்கம்






மூளை நரம்பு செல்களில் ஏற்படும் பாதிப்பின் காரணமாக ஏற்படும் குறைபாடுகள் மற்றும் பின்னடைவுக்கு பிஸியோதெரபி பயிற்சி அளிப்பதன் அவசியம் பற்றிய ஒரு நாள் பயிலரங்கை பெத்சான் சிறப்பு பள்ளியும், இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைகழகம், மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கம் மற்றும் பெஸ்ட் அறக்கட்டளையும் இணைந்து நடத்தியது. இந்நிகழ்ச்சியை மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் Dr. A. **ரத்தினவேல்** அவர்கள் வாழ்த்துரை வழங்கி துவக்கி வைத்தார்கள். உடன் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை மண்டல இயக்குனர் Dr. M. **சண்முகம்** அவர்கள், பள்ளியின் தலைவர் திரு.R. **ஜெயசீலன்** ஆகியோர் உள்ளனர். இப்பயிலரங்கின் சிறப்பு பேச்சாளராக வேலூர், கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி, இயன்முறைத் துறையின் இணை பேராசிரியர் திரு. **செந்தில் வேல்குமார்** அவர்கள், செயல்முறை விளக்கத்துடன் மிக எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் வகுப்புகளை நடத்தினார்கள். இதில் பல்வேறு சிறப்பு பள்ளிகளிலிருந்து சிறப்பு ஆசிரியர்கள், பிசியோதெரபிஸ்டுகள் மற்றும் CSI ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி மாணவிகள் சுமார் 50 - க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.

---

## கல்விச் மற்றும் இன்பச் சுற்றுலா

ஒவ்வொரு வருடமும் கல்வி மற்றும் இன்பச் சுற்றுலாவாக மாணவர்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் மாணவர்கள் பல புதிய காரியங்களை கற்றுக் கொள்வதற்கும், சக மாணவர்களோடு தங்களது அன்பையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் பெரிதும் உறுதுணையாக இருந்தது.















**2023 - ஆம் ஆண்டு மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான எறிபந்து விளையாட்டில் கோப்பையை வென்ற எமது பள்ளி வீரர்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சங்கீதா, இ.அ.ப., அவர்கள் கோப்பையை வழங்கி கௌரவித்தார்கள்.**